
www.newwisdomministries.com

# ஞான ஒலி



ஞானம் 07 – ஒலி 13 – 31.03.2024



# ஆசிரியர் பக்கம்

இந்த உலகில் உயிர்பெற்று எழுந்து மரணத்தை வென்ற ஒரே கடவுளின் மகன் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துதான். அவரின் சீடர்கள் என்ற பெருமிதத்தோடு நாம் அனைவரும் உயிர்ப்பின் பெருவிழா நல்வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வோம்.

அன்பிற்கினிய ஞான ஒலி இணைய இதழின் வாசகப் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் ஒரே உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலட்சிய வாழ்வு வாழ நினைக்கும் யாருக்கும வாதைகள் உண்டு. அது இறைமகனாய் இருந்தாலும் அதே விதிப்படிதான் நடக்கும். ஏனென்றால், இந்த உலகின் வக்கிரப்புத்தி செருப்புல அடித்தாலும் மாறவே மாறாது. அதற்கு சொல்புத்தியும் இல்ல, சுயபுத்தியும் இல்ல. இறைவன் படைத்த உலகம் இறைவனோடு இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், இறைவனோடு எப்போதும் எதிரான நிலைப்பாடுடைத்த இருள் நிலை, இறைவனுக்கும், இறைவனின் திட்டத்திற்கும் எப்போதும் எதிராகவே இருக்கும். அது இருட்டுக்குள்ளே, குருட்டாட்டம் போடும் அறிவற்ற கூட்டம். அதற்கு சிந்திக்கும் திறனும், ஏன் எதைச் செய்கின்றோம் என்ற தெளிவுமற்ற குருட்டுக் கபோதிக் கூட்டம். எதைச் சொன்னாலும் புரிந்து கொள்ளும் குறைந்தபட்ச அறிவே அதற்கு இல்லை என்பதால்தான் அந்தக் குருட்டுக் கூட்டத்தின் முன் பேசாதிருந்தார். மக்களை ஆள வந்த ஆளுநருக்கும் உண்மை என்றால் என்னவென்றே தெரியவில்லை. ஓர் ஆளுநன் புத்தி இல்லாவனாய் இருந்தால், அவன் பேசுவதெல்லாம் பொய்யாகவும், புரட்டாகவும்தான் இருக்கும், ஏனென்றால், அவன் வளர்ந்த விதம் அப்படி. கூலிக்கு மாறடிப்பவன், தன் பதவிக்காக யாரையும் காவுவாங்கத் தயங்காதவன். பிலாத்து இயேசுவை தப்பிக்க வைக்கத்தான் முயன்றான். ஆனால், அவன் உண்மை என்ன என்று தெரியாததாலும், இயேசுவைப்போல், உண்மைக்குத் தன் உயிரையும் கொடுக்கும் துணிவு இல்லாததாலும், அவன் பயந்துபோய், தன் கையைத் கழுவி, தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடிப்போனான்.

இயேசு நிதர்சன உண்மை நிலவரத்தில், அனைத்தின் நடவடிக்கைகளையும் வேடிக்கை பார்த்தபடி, தன் இலட்சியத்தில் தொடர்ந்தார். அவரிடம் இருந்த அந்தப் புரிதலும், நிதானமும், இலக்கை எட்டவேண்டும் என்ற தெளிவில் இருந்த உறுதியும் இன்றுவரை உயர்ந்த இலட்சியத்தோடு வாழ நினைப்பவர்கள் சோர்ந்து போகாது வெற்றிநடை போட நினைப்பவர்களுக்குப் பாடநூலாக இருக்கின்றது. அதற்காகத்தான் நானே வாழ்வும், வழியும், உண்மையும் என்று அன்றே பூடகமாகம், கேட்கச் செவியுள்ளவர் கேட்கட்டும் என்றும் சொல்லிச் சென்றார்.

ஏனென்றால், உண்மை யாருக்கும் அவ்வளவு எளிதாய்ப் புரிந்துவிடுவதில்லை, அதைவிட, அதை யாரும் தெள்ளத் தெளிவாய் பார்க்கும் வாய்ப்பும் கிடைப்பதில்லை.

ஆதலால்தான் இயேசு நீங்கள் பார்த்தும் பார்ப்பதில்லை, கேட்டும் உணர்வதில்லை என்று சொன்னார். ஏனென்றால், உண்மை அணுக முடியாத ஒன்றாகத்தான் இருக்கும்.

இயேசுவே, அந்த மீட்பின் உண்மையை, கெத்தேமேனித் தோட்டத்தில், இரத்த வியர்வை சிந்தித்தான், அந்த உண்மையின் முழுப் பரிமாணத்தையும்

கண்டுகொள்ள முடியாமல், தனது மனித பலவீனத்தையும் இறைத்தந்தையின் கைகளில் ஒப்படைத்து, என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று தனது இலக்கை நோக்கி செல்ல முனைந்தார். அதன்பிறகுதான் இறையாற்றலைப் பெற்றார். முழு மனிதனாக அனைத்துப் பாடுகளின் வழியே சென்றுதான் இறைமகன் என்னும் மாட்சியோடு உயிர்தொழுந்தார். அதுதான் இறைத்தந்தை, அவருக்குக் கீழ்படிவோருக்கு, அவர் உண்மையானவராகவும், உண்மையின் முழுப்பேருளைத் தருபவராகவும், நம்பிக்கையின் ஆதாரமாகவும் இருக்கின்றார் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. அதுதான் நற்செய்தி. அனைத்தும் இறைத் தந்தைக்கே மாட்சிக்காக நடைபெறுகிறது என்பதுதான் நாம் அறிந்துகொள்ள வேண்டிய பேருண்மை.

அந்த உண்மையே அனைத்து தீமைகளிலிருந்தும், இருள் சக்திகளிலிருந்தும் நமக்கு விடுதலை அளிக்க வல்லது. அதற்கு நாம் அடிபணிவதே உண்மையான ஞானம் என்பதைத்தான் கெதசேமேனிப்பாடத்திட்டம் நமக்குக் கற்பிக்கின்றது.

இயேசு மிகச் சிறந்த தலைவரும், கல்வியாளரும், அனைத்து ஆசிரியத்தின் ஊற்றாகவும் இருக்கும் நல்லாசிரியர். தான் கற்பிக்க விரும்பிதை, தன் வாழ்க்கையின் வழியாகவே கற்றுத் தருபவர்.

பாவத்திலிருந்து மீண்டவர், இறைவனை நோக்கியே பயணிப்பார் என்று சொல்வார்கள். மேலும் அந்த ஒளியிலேயே நிலைத்து நிற்கவும் உறுதியாய் இருப்பார்கள் என்பதே உண்மை. அப்படிப்பட்டவர்கள், மேலுலகு சார்ந்தவற்றையே நாடுவார்கள். எந்தவித அல்ப ஆதாயத்திற்காக அவற்றை விட்டு விலகமாட்டார்கள்.

இயேசு பிடிபட்டவுடன், எங்கே தாங்களும் பிரச்னைக்குள் மாட்டிக்கொள்வோம் என்ற பயத்தில், ஓடி ஒளிந்துகொண்ட சீடர்கள், இயேசுவின் உயிர்ப்பின் அனுபவத்திற்குப் பிறகு சாகவும் துணிந்ததும் இவ்வாறுதான். சீடர்களின் இறுதி முடிவு பெரும்பாலும், இனிமையானதாக இருந்ததில்லை. இரத்தக் குளியலில்தான் முடிந்தது. அவர்கள் கண்ட அந்த இறை அனுபவம். அத்தகைய பேராற்றலைத் தந்தது.

அப்படிப்பட்ட பேருளைப் பெறுவது சாதாரணமானதல்ல. அதற்கு இணையானது இந்த பேரண்டத்தில் எங்குமே இல்லை என்ற உணர்வோடு அனைத்தையும் குப்பையெனக் கருதும் தெளிவுதான், இறைநம்பிக்கையில் கிடைக்கும் பொக்கிஷமாகும்.

அத்தகைய சிந்தனைத் துணிவும், அதிலே நிலைத்து நிற்கும் திமிரும்தான் இயேசுவின் உயிர்ப்பிலே நாம் கொள்ளும் நம்பிக்கையின் உறுதியால் நமக்குக் கிடைக்கும் இறையருள்.

அப்படிப்பட்டவர்களை இந்த உலகில் எதுவும் அசைக்கவே முடியாது. ஏன் அண்டவே அண்ட முடியாது.

இந்த உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் பெயர்தான், இன்று இந்தப் பேரண்டத்தில் உள்ள பெயர்களுக்கு எல்லாம் மேலாக உள்ளது. எதெல்லாம் பேராற்றல் பெற்றது, உயர்ந்தது என்று நினைக்கின்றோமோ? அதெல்லாம், இயேசுவின் பெயரின் முன் மண்டியிட்டுக் கிடக்கின்றது.

அணுக முடியாத அந்தப் பேரொளியின் பங்களார்களாக வாய்ப்பு பெற்ற நாம் அனைவரும் எவ்வளவு பாக்கியவான்கள் என்பதை உணர்வோம். இந்தப் பேருளை நமக்குக் தந்த அந்த இறைத்தந்தைக்கு நாம் காட்டும் நன்றிக் கடன். பெரும் தியாகத்தின் காணிக்கையாக இருக்க வேண்டும்.

ஆபேலைப்போல, கடவுளுக்கு நாம் தரும் காணிக்கை நம் நம்பிக்கையின் ஆழத்தைக் காண்பிப்பதாக இருக்க வேண்டுமென பிலிப்பியர் 4ம் அதிகாரம் 8 ம் வசனம் கூறுகிறது.

சகோதர, சகோதரிகளே, உண்மையானவை, கண்ணியமானவை, நேர்மையானவை, தூய்மையானவை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, நற்பண்புடையவை, போற்றுதற்குரியவை, எவையோ, அவற்றின்படி வாழ்பவர்களே, உயிர்த்த ஆண்டவரின் உயிர்ப்பில் பங்கு பெறத் தகுதியுடைய மக்கள். அவர்களே கடவுளுக்குரிய நறுமணக் காணிக்கைகள்.



# விவிலியம் அறிவோம்




வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைவதற்கான தயாரிப்பு யோசுவா நூல் இணைச்சட்ட ஆசிரியரால் தொகுக்கப்பட்டு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. தொடக்கத்தில் மோசேயின் இறப்பை நினைவுகூரும் ஆசிரியர் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுவதுபற்றி இந்நூலில் பேசுகிறார் அதைத் தொடர்ந்து இஸ்ரயேல் மக்களின் தலைவராக யோசுவா நியமிக்கப்படுவது குறிப்பிடப்படுகிறது. மறையுரை பாணியில் பதிவுசெய்யப்படும் இப்பகுதி கடவுளால் ஒரு பணிக்காக நியமிக்கப்படுபவர் எப்படி நியமிக்கப்படுகிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் செய்யவேண்டிய பணி, அப்பணியைச் செய்வதற்கு ஊக்கமளித்தல், கடவுளின் உதவிபற்றிய வாக்குறுதி ஆகியக் கூறுகளைக் கொண்டதாக இப்பகுதி உள்ளது. பணியைச் செய்து முடிக்கக் கொடுக்கப்பட்ட ஆணையுடன் யோசுவா மோசேயைத் தொடர்ந்து மக்களை வழிநடத்தும் தலைவராக அறிமுகப்படுத்தப்படுகின்றனார். யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்ட பணி ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுப்பதாகக் கூறிய கானான் நாட்டிற்கு அவர்களை அழைத்துச் செல்வதாகும். ஆண்டவரின் உதவியுடன் அவர் அப்பணியைச் செய்யவேண்டும்.

யோசுவா தலைவராக நியமிக்கப்பட்டபின் ஆண்டவர் அவரிடம் மோசேயுடன் நான் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன். உன்னைக் கைநெகிழ மாட்டேன்; கைவிடவும் மாட்டேன் என்ற வாக்குறுதியைத் தருகின்றார். ஆண்டவரின் உடனிருப்பு யோசுவா தனது பணியைச் செய்து முடிப்பதற்கு உதவி செய்யும். நாடு கடவுளின் கொடையாகக் கொடுக்கப்பட்டாலும் அதைப் பெறுவதற்கு இஸ்ரயேல் மக்களும் தங்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்கவேண்டும். அவர்கள் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவர்களாக திடமனதுடன் துணிந்து செல்லவேண்டும். கடவுளின் கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும். ஆண்டவருக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட நாட்டில் தொடர்ந்து வாழ்வதற்கு இவற்றை அவர்கள் செய்யவேண்டும். இந்தச் செய்திகள் நாடு கடத்தப்பட்டவர்களாக, அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு முக்கியச் செய்திகளைத்

தருவனவாக உள்ளன. கடவுளின் கட்டளைகளுக்குப் பிரமாணிக்கமில்லாமல், ஆண்டவருக்கு உண்மையில்லாமல் வாழ்ந்ததுதான் அவர்கள் நாட்டை இழப்பதற்கான காரணம். நாட்டை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்றால் கடவுளில் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்; அவருடைய உடனிருப்பில் நம்பிக்கை கொள்ளவேண்டும்; ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். தொடக்கத்திலேயே வாக்களிக்கப்பட்ட நாடுபற்றிய சில செய்திகள் யோசுவாவுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் கூறப்படுகின்றன. அவர்கள் கைப்பற்றிக் குடியிருக்கப்போகும் நாடு மக்களின் முயற்சியாலோ அவர்களின் கடின உழைப்பாலோ பெறப்படுவது அல்ல மாறாகக் கடவுளால் கொடுக்கப்படும் ஒரு கொடை என்பதை அவர்கள் மறத்தலாகாது. ஆண்டவர் மோசேக்குக் கொடுத்த வாக்குறுதியின் நிறைவுதான் நிலத்தைக் கொடையாகக் கொடுப்பதற்குக் காரணமாக உள்ளது (யோசுவா 1:3). நாட்டின் எல்லைகள் பற்றிய செய்தியும் யோசுவாவுக்குக் கூறப்படுகிறது. இறைச் சொற்றொடர் நான்கில் கொடுக்கப்பட்டுள்ள நாட்டின் எல்லைகள் பற்றிய குறிப்புதான் விவிலியத்தில் வருகின்ற நிலம் பற்றிய பதிவுகளில் மிகவும் விரிவான, தெளிவான பதிவாக உள்ளது. இப்பதிவில் மூன்று நிலையான புள்ளிகள் உள்ளன. அவை முறையே பாலைநிலம், யூப்பிரத்தீசு, மற்றும் பெருங்கடல் ஆகும். பாலைநிலம் யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கில் உள்ள நிலப்பரப்பையும் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள நெகேபையும் குறிக்கிறது. யூப்பிரத்தீசு ஆறு நாட்டில் வடக்கு எல்லையைக் குறிக்கிறது. பெருங்கடல் என்பது மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மத்தியதரைக் கடலைக் குறிப்பிடுகிறது. இச்சொற்றொடரில் குறிப்பிட்டுள்ளபடி நாடு வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லெபனான் மற்றும் பண்டைய காலத்திலும் இன்றும் சிரியா என்று அழைக்கப்படும் நாட்டையும் உள்ளடக்கியது. ஆனால் வரலாற்றைப் பார்க்கும்போது இஸ்ரயேல் நாடு இந்த எல்லைகளைக் கொண்டதாக எப்போதுமே இருந்ததில்லை. கி.மு. பத்தாவது நூற்றாண்டில் ஒன்றிணைந்த இஸ்ரயேலின் அரசர்களாக இருந்த தாமிது மற்றும் அவரது மகன் சாலமோன் ஆட்சியின் கீழ் நாடு விரிவாக்கம் செய்யப்பட்டது. ஆனால் அப்போதும் இங்கே கூறப்படுகின்ற எல்லைகளை உள்ளடக்கியதாக நாடு இல்லை என்பதுதான் உண்மை.

கடவுளின் அறிவுரைகளைக் கேட்டபின் யோசுவா மக்கள் தலைவர்களுடன் பேசுகிறார். யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைவதற்காக மக்களைத் தயாரிக்க அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். மூன்று நாள்களில் யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு அவர்கள் தயாராக வேண்டும். அவர்களுக்குத் தேவையான உணவை மக்கள் தயாரிக்க வேண்டும் (யோசுவா 1:10-11) மற்றும் பயணத்திற்குத் தேவையான

அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை எளிதில் கைப்பற்றுவார்கள். ஏனெனில் இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் ஏற்கனவே அந்த நாட்டைக் கொடுத்துவிட்டார். அந்த நாட்டில் சென்று குடியேறுவதுதான் மக்கள் செய்யவேண்டிய பணி என்ற பொருளும் தொனியும் யோசுவாவின் வார்த்தைகளில் ஒலிக்கின்றன. யோசுவா 1:12-15 வரையுள்ள இறைச்சொற்றொடர்களில் யோசுவா கீழை யோர்தானில் குடியேறிய ரூபன், காத்து மற்றும் மனாசேயின் அரைக்குலங்களுடன் பேசுகிறார். அவர்கள் குடியேறுவதற்கான நிலம் கிடைத்துவிட்டதால் தங்கள் சகோதரர்களான ஏனைய குலங்களை மறந்துவிடக்கூடாது. அவர்களில் போர் வீரர்களாக இருப்பவர்கள் ஏனைய குலங்களுடன் இணைந்து செல்லவேண்டும்; வாக்களிக்கப்பட்ட நாட்டை அவர்கள் கைப்பற்றி அங்கே குடியேறுவதுவரை அவர்களுடன் இணைந்து போர்புரிய வேண்டும். அதன்பின் அவர்கள் கீழை யோர்தானுக்குத் திரும்பி வரலாம். யோசுவா 1:16-17 இறைச்சொற்றொடர்கள் அவர்களின் பதிலைப் பதிவு செய்கிறது. கீழை யோர்தானில் குடியிருக்கும் குலங்கள் யோசுவாவின் கட்டளைகளுக்கு உடன்படுகின்றனர். வாக்களிக்கப்பட்ட நாட்டில் ஏனைய குலங்கள் குடியேறுவதுவரை அவர்களுடன் இணைந்து செயல்படுவதற்கு வாக்குறுதி கொடுக்கின்றனர். யோசுவா நூலின் முதல் பிரிவின் முக்கியமான நோக்கமாக மோசேயின் இறப்பிற்குப்பின் யோசுவாவின் தலைமையை மக்கள் ஏற்று அவருடைய கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள் என்பதைப் பதிவுசெய்வது உள்ளது.

யோசுவா முதல் பிரிவில் வருகின்ற இணைச்சட்ட இறையியல் பல உண்மைகளை நமக்குக் கூறுகிறது. எனவே யோசுவா நூல் முதல் பிரிவில் வருகின்ற இறையியலைச் சுருக்கமாகப் பார்ப்போம். முதலாவதாக, மோசேக்குப்பின் மக்களை வழிநடத்துகின்ற தலைவரும் மக்களும் மோசேயின் சட்டங்களைப் பின்பற்றி வாழவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. மோசேயின் சட்டங்கள்தான் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள இறைவார்த்தை. அந்த இறைவார்த்தை தருகின்ற வழிகாட்டுதல்களின்படி அவர்கள் வாழவேண்டும். இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதுதான் வெற்றியையும் வளமான வாழ்வையும் அவர்களுக்குத் தரும். இணைச்சட்ட நூலில் மோசேயின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதன் வெகுமதியாக வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி அங்கே தொடர்ந்து வாழ்வது குறிக்கப்பட்டுள்ளது. இறைவார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வாழ்வது நிலத்தை இழந்து, நாடு கடத்தப்படுவதற்குச் சமம். இரண்டாவதாக, நிலம் ஒரு முக்கியமான கருப்பொருளாக வருகிறது. நிலம் கடவுளால் கொடுக்கப்படுகிறது. நிலம் கடவுளின் கொடை. யோசுவா நூலில் நிலம் ஒரு

முக்கியமான இறையியல் கருத்து. நிலத்தை வெற்றிகொண்டு குடியேறுவது கடவுளைச் சார்ந்து உள்ளது; ஏனெனில் நிலத்தைக் கடவுள்தான் மக்களுக்குத் தருகிறார். நிலத்தைத் தருவதாக இஸ்ரயேலின் மூதாதையர்களுக்குக் கடவுள் வாக்குறுதி கொடுத்துள்ளார்.

மூன்றாவதாக, யோசுவா 1:3-5 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் இச 11:24-25 இன் எதிரொலியாக வருகிறது. இணைச்சட்டம் நூலும் யோசுவா நூலும் வாக்குறுதி கொடுத்தல் வாக்குறுதி நிறைவேறுதல் என்ற கருத்தால் ஒன்றோடொன்று தொடர்புடையதாக உள்ளது. நிலத்தைக் கைப்பற்றவும் அதில் தொடர்ந்து வாழவும் மக்களும் அவர்களின் தலைவரும் மோசேயின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். கடவுள் நிலத்தைக் கொடையாகக் கொடுப்பதும் மக்கள் கடவுளுக்கும் இறைவார்த்தைக்கும் கீழ்ப்படிந்து வாழ்வதும் உடன்படிக்கையின் முக்கிய கூறுகளாக உள்ளன. இதனால்தான் இணைச்சட்ட வரலாறு நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது. வரலாறு வெற்றியுடன் நிறைவடைய வேண்டுமென்றால் கடவுள் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்; மக்களும் கீழ்ப்படிதலுடனும், பிரமாணிக்கத்துடனும் வாழ வேண்டும்.

நான்காவதாக, நிலம் மற்றும் இறைவார்த்தை ஆகிய கருத்துக்கள் தலைமைத்துவம் என்ற கருத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. மக்களின் பிரமாணிக்கமும், வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவர்கள் தொடர்ந்து வாழ்வதும் அவர்களை வழிநடத்துகின்ற தலைவரின் தகுதியைச் சார்ந்ததாக உள்ளது. தலைவரின் பணி கடவுளின் உடனிருப்பை அடிப்படையாகக் கொண்டது. தலைவர் வீறுகொண்டு, துணிந்து செயல்படவேண்டும். மோசே கட்டளையிட்ட எல்லாச் சட்டங்களையும் கடைபிடிப்பதில் கவனமாயிருக்க வேண்டும். நீர் எங்களுக்குக் கட்டளை இடுவதை நாங்கள் செய்வோம். நீர் அனுப்பும் இடத்திற்கெல்லாம் நாங்கள் செல்வோம் (யோசுவா 1:16) என மக்கள் தலைவரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். இப்பிரிவில் தலைமைத்துவம் மோசேயை அடிப்படையாக வைத்தே சித்தரிக்கப்படுகிறது. யோசுவாவின் தலைமைத்துவம் மோசேயின் தலைமைத்துவத்தின் தொடர்ச்சியாகவே உள்ளது. மோசே ஆண்டவரின் ஊழியராக அறியப்படுகிறார். யோசுவா தொடக்கத்தில் மோசேயின் உதவியாளராக அறியப்பட்டாலும் இறுதியில் மோசேயைப்போல ஆண்டவரின் ஊழியராக அறியப்படுகிறார் (யோசுவா 24:29). எனவே கடவுள் மோசேயுடன் இருந்து அவரை வழிநடத்தியதுபோல யோசுவாவுடனும் இருந்து அவரை வழிநடத்துவார். மக்களும் மோசேக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்ததுபோல யோசுவாவுக்கும் கீழ்ப்படிந்து வாழவேண்டும்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf



# ஞாயிறு மறையுரை



அருட்பணி.டேவில் மைக்கிள்
பங்குத் தந்தை
புனித அந்தோணியார் ஆலயம்
மணலி
குழித்துறை மறைமாவட்டம்


## ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு
## 31.03.2024

**திருப்பலி வாசகங்கள்**


திருத்தூதர் பணிகள் 10/34, 37-43
கொலேசேயர் 3/1-4
யோவான 20/1-9

உலக வரலாற்றில் மாண்டவர் எவரும் மீண்டும் உயிருடன் எழுந்ததில்லை. இயேசு ஒருவரே மரணத்தை வென்ற மறுபடியும் உயிருடன் எழுந்தார். நாமெல்லாம் இறப்புக்குப்பின் உயிருடன் வேறு வடிவில் எழுப்பப்படுவோம் என்பதற்கு முன்னடையாளமாக இயேசுவின் உயிர்தெழுதல் அமைந்திருக்கிறது. நாம் கிறிஸ்துவோடு எழவேண்டும் எனில் விண்ணுக்குரிய இயல்போடு மேலுலகத்தைச் சாந்தவற்றை நாட வேண்டும் என அழைப்பு விடுக்கிறார் தூய பவுலடியார்.

உலக நடவடிக்கைகளிலே ஊறிப்போன மனிதர்கள் விண்ணக வாழ்வை நினைத்துப் பார்ப்பதில்லை. மரணத்தோடு வாழ்வு முடிந்துபோகும் எண்ணத்தில் இந்த உலகத்தோடு தங்களின் எண்ணங்களைச் சுருக்கிக் கொள்கிறார்கள். ஆனால் இயேசுவின் உயிர்தெழுதல் நிகழ்வு அடிப்படை மாற்றத்திற்கும் எண்ணத்தைக்கூட மாற்றி அமைத்துக் கொள்ளவும், வழிகோலியது. கோழையென உன்னைக் குறுக்கிக்கொண்டு இந்த உலகின் சக்திகளுக்கு அச்சப்பட்டுக் கொண்டிருந்த பேதுரு இயேசுவின் உயிர்தெழுதலால் புனித மனிதராகப் புறப்படுகிறார். எருசலேம் வீதிகளில் இயேசுவின் நற்செய்தியை எந்தப் பயமுமின்றி முழங்குகிறார். மகதலா மரியாவின் அழைப்பின் பேரில் இயேசுவின் கல்லறைக்கு ஓடிய சீடர்கள் வெறுமையாக இருந்த கல்லறையைக் கண்டு இயேசு உயிர்த்துவிட்டாலர் என்று நம்புகின்றனர்.



உயிர்தெழுதல் நிகழ்வே நம்பிக்கையின் மீது அமைந்த ஓர் ஆழமான அனுபவம்தான். இறைவாக்கினரும், மறைநூலும் இயேசுவின் உயிர்தெழுதலை முன்னறிவித்தும்கூட, அதனை புரிந்துகொள்ளும் நிலையில் சீடர்கள் இல்லை. உண்மை உறங்கிவிடாது என்று உலகிற்குச் சொன்ன சரித்திர நிகழ்வே இந்த உயிர்ப்பு. இது நிகழ்ந்திராவிடில் நாம் கொள்ளம் நம்பிக்கை வீணாகவே போயிருக்கும். ஆனால் இருளை ஒளி வென்றுவிட்டது. நமது இறைநம்பிக்கை இயேசுவின் உயிர்ப்பில் வலிமை பெறவேண்டும். பேதுருவின் புது அத்தித்யாயைத்தைப் போல நாமும் மேலுலகு எண்ணங்களை நாடி புதுப்படைப்பாக மாறுவோம். ஆமென்.




# ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

தி.ப. 10:34அ, 37-48, கொலோ. 3:1-4
யோவா. 20:1-9



**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

நமக்குள் இருக்கும் பாவ இருளை அகற்றியும், நம் இதய கதவை அடைத்திருக்கும் பாவக் கற்களைத் தூக்கியெறிந்தும் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சி களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

முகில் விடுத்து வெளிக்கிளம்பும் முழுமதியென இயேசு வெற்றி வீரராய் கல்லறையில் இருந்து உயிருடன் எழுந்து சாவை வென்று சரித்திரம் படைக்கிறார். வெற்று கல்லறை வெற்றியின் கருவறை யாக உருமாற்றம் பெறுகிறது. இறப்பு என்பது முடிவல்ல, அது மறு வாழ்வின் தொடக்கம் என்பதை இயேசுவின் உயிர்ப்பு எடுத்து சொல்கிறது.

இறத்தலும், உயிர்த்தலும் பாஸ்காவின் மறைபொருள். நாமனைவரும் இன்றைய திருப்பலி வழியாக இந்த பாஸ்கா மறைபொருளில் முழுமையாக பங்கெடுக்க அழைக்கப்பட்டி ருக்கிறோம்.

உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ இன்றைய வழிபாடு நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது. இயேசுவின் உயிர்ப்பு நற்செய்தி அறிவிப்புக்கு மட்டுமல்லாமல், நமது விசுவாச வாழ்வுக்கும் அடித்தளமாக இருக்கிறது.

மகிழ்ச்சியான வாழ்வை, நிம்மதியான வாழ்வை, முடிவில் லாத வாழ்வை ஆண்டவர் இயேசு தனது இறப்பின் மூலமாக, உயிர்ப்பின் வழியாக பெற்றுத் தந்துவிட்டார்.

இயேசுவின் சிலுவை சாவிற்கும், அவரது இறுதி அடக்கத்திற்கும் சாட்சிகளாக இருந்த பெண்களே, அவரது உயிர்த்தெழுதலுக்கும் சாட்சிகள். அவர்களைப் போல் நாமும் உயிர்ப்பின் சாட்சிகளாக மாறி, உயிர்ப்பின் செய்தியை உலகெங்கும் அறிவிக்கும் கருவிகளாவோம்.

நாம் புதுவாழ்விற்கான அர்ப்பணிப் போடு, கிறிஸ்துவே நமக்கு வாழ்வு அளிப்பவர் என்னும் உண்மையை உணர்ந்தவர்களாய், இறையரசு சார்ந்தவற்றிற்கு முதன்மை கொடுத்து வாழ வரம் வேண்டி, பெருமகிழ்ச்சியுடன் இத்திருப் பலியில் பங்கு பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசுவின் தலையான சீடரும், அவருடைய வாழ்க்கையில் நெருக்கமாகப் பங்குகொண்டவருமான புனித பேதுரு உயிர்த்த ஆண்டவருக்குச் சான்று பகர்ந்து ஆதித் திருச்சபைக்குத் தந்த மறையுரையே இன்றைய முதல் வாசகம். நம் ஒவ்வொருவரையும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்கு சான்று பகர அழைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பின் விளைவாக நாமும் உயிர்த்தெழுந்தவர்களாய் இருக்கிறோம் என்று பறைசாற்றுகிறார் பவுலடியார். வாழ்வளிக்கும் கிறிஸ்து, மாட்சிமையில் தோன்றும்போது, அவரோடு இணைந்து, இன்புறும் வாழ்வில் நிலைக்க நாம் எப்போதும் மேலுலகு சார்ந்தவற்றை நாட வேண்டுமென அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்தைக் கவனமாகக் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) மரணத்தை வென்று உயிர்த்த, வாழ்வின் ஊற்றாகிய இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், திருநிலையினர் அனைவரும் ஆன்மீகத்தில் சிறந்து விளங்கவும் திருச்சபையின் விசுவாச வாழ்வில் புத்துயிர் அளிக்கும் சாட்சியங்களாய் ஆண்டவர் இயேசுவுக்கு சான்று பகரும் உறுதியான உள்ளம் கொண்டவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) ஒளி வழங்கும் உன்னத இறைவா, உம் திருமகனது உயிர்ப்புப் பெருவிழாவை உள்ளார்ந்த பக்திச் சூழலில் கொண்டாடும் நாங்கள், இவ்வுலக நற்பண்புகளில் வளரத் தடையாக உள்ள பாவச் செயல்களை விட்டொழித்து உம்மோடு உயிர்ப்பின் அனுபவத்தை பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) எம் தாய்த்திரு நாட்டை ஆளும் அரசியல்வாதிகளையும், தலைவர்களையும் உம் திருப்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் லஞ்சம், ஊழல், இனப்பாகுபாடு, மத வேறுபாடு போன்றவற்றிலிருந்து உயிர்ப்பு பெற்று, அவர்கள் நாட்டையும், நாட்டு மக்களையும் நேர்மையான வழியில், சமத்துவ பாதையில் வழி நடத்திட அவர்களுக்கு வேண்டிய ஞானத்தையும் ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) சாவை வென்று சாதனைக் காவியம் படைத்த எம் இறைவா, ஊனியல்பின் இச்சைகள், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, கட்சி மனப்பான்மை போன்ற இவ்வுலகு சார்ந்தவற்றை முற்றாகத் தவிர்த்து விட்டு மேலுலகு சார்ந்தவைகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் போன்ற உயர்ந்த மதிப்பீடுகளை கடைப்பிடித்து உமக்கு சான்று பகர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



சொகுசாக வாழ விரும்புபவர்கள், அடிமட்ட அடிமைகள்.
சாவால்களை விரும்புபவர்கள் உயர்வார்கள்.

மன்னிப்பவர்கள் உண்மையான சமாதானத்தையும்
அமைதியையும் அனுபவிப்பார்கள்

வாழ்வில் வெற்றியும் நிரந்தரல்ல, தோல்வியும் நிரந்தரமல்ல
போராட்டம் ஒன்றே நிரந்தரமானது.

உங்களைவிட, தரம் தாழ்ந்தவர்களும், இயலாதவர்களுமே
உங்களை விமர்சனம் செய்வார்கள்

நீங்கள எவ்வளவு நல்லவராக இருந்தாலும்
தீயவர்கள் உங்களைத் தீயவராகத்தான் பார்ப்பார்கள்,

அதிகாலையில் விழிப்பவர்களும், தீமைகளைத் தவிர்க்கும்
விழிப்பு நிலையைப் பெற்றவர்களும் தோல்வி அடைவதில்லை

துன்பங்கள் ஒருவரின் தகுதியையும், அவருக்குள்
மறைந்திருக்கும் ஆற்றலையும் வெளிக்கொணரும்.

யாரையும் திருப்திபடுத்த வேண்டிய அவசியம் எனக்கில்லை
என்ற நினைப்பில்தான் ஒருவரின் சுதந்திரம் வேர்விடுகின்றது.

உங்களைக் கோபப்படுத்தியது எது என்று யாரும் பார்க்க மாட்டார்கள்
ஆனால், உங்களின் கோபத்தை விமர்சிப்பார்கள்.

அவன் கதை முடிந்துவிட்டது என்று நினைப்பவர்கள் முன்
திமிராக நிமிர்ந்து நில்லுங்கள், உங்கள எதிரியும் சிலிர்த்துப்போவான்.

முன்சார்பு எண்ணங்களே முட்டாள்களை ஆளும்

உங்களை நேரத்தை வீணடிப்பவர்களுக்கு
இரண்டாவது வாய்ப்பு கொடுக்காதீர்கள்

# தமிழே..அமுதே..எனதுயிரே





மொழிக்கு முதலில் வரும் வல்லெழுத்துக்கள் க ச த ப.

மொழி என்றால் என்ன?

இலக்கணத்தில் மொழி என்றால் சொல் என்று பொருளாகும்.
சொல்லுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்: மொழி, பதம், கிளவி.

வல்லினம் மிகுதல் அல்லது தோன்றுதல் என்பதில் வல்லெழுத்துகள் நிலைமொழியுடன் சேர்கையில் அவற்றின் மெய்யெழுத்துக்கள் தோன்றிப் புணரும்.

நிலை மொழி என்றால் என்ன?

முதலில் நிற்கும் சொல் நிலைமொழி. அதனைத் தொடர்ந்து வரும் சொல் வருமொழி ஆகும்.

தொடர் தரும் பொருளைக் காணலாம்:
1. சின்னக் கொடி –சின்னம் தாங்கிய கொடி
 சின்னகொடி – சிறிய கொடி.

2 தோப்புக்கள் – தோப்பில் எடுத்த கள்.
 தோப்புகள் – தென்னை மரத் தோப்பு.
 கடைப்பிடி – பின்பற்றுதல்
 கடைபிடி – கடையைப் பிடித்தல்
 நடுக்கல் – மையத்தில் உள்ள கல்
 நடுகல் – நடப்பட்ட கல்
 கைம்மாறு – பிரதிபலன்
 கைமாறு – கைக்கு கை மாறுதல்

பொய்ச்சொல் – பொய்யான சொல்
பொய் சொல், பொய்யைச் சொல்.

அடுத்ததாக பின்வரும் சொற்களில் வல்லினம் மிகுமா?

1. பெட்டி – செய்தி
2.விழா – குழு
3.கிளி – பேச்சு
4.தமிழ் – தேன்
5.தை – பூசம்
6.கூட – கொடு
7. கத்தியை விட– கூர்மை
8.கார் – பருவம்.

இவற்றில் வல்லினம் மிகும்.

1. பெட்டிச் செய்தி
2.விழாக்குழு
3.கிளிப்பேச்சு
4.தமிழ்த்தெரியும்
5.தைப்பூசம்
6.கூடக்கொடு
7.கத்தியை விடக் கூர்மை
8. கார்ப்பருவம். (மழைக்காலம்)


வல்லினம் மிக வேண்டியதன் முக்கியத்துவம்:
1.சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும்

2.பொருள் மயக்கத்தைத் (குழப்பத்தை) தவிர்க்கவும்

3. பேச்சின் இயல்பை பேணவும்

4. இனிய ஓசைக்காகவும் தேவைப்படுகிறது.

லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.





## வெற்றி

நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சிஇ இவர் உண்மையாகவே இறைமகன் என்றார்கள். –(மத்தேயு: 27–54)

உலகில் வாழும் உயிரினங்கள் விரும்புவது வெற்றி. வெற்றி என்பது வெளியில் இல்லை. அது விதைக்குள் இருக்கின்ற விருட்சம் போல நமக்குள் இருக்கின்றது. தவழ்ந்து செல்லுகின்ற குழந்தை முட்டி மோதி விழுந்து எழுந்து பிடித்து தாங்கி எழுந்து நடக்க ஆரம்பிக்கும்போது போது வெற்றி ஏற்படுகின்றது. ஆய்வகத்தில் பல தோல்விகளை கண்டு முயற்சி செய்தவர் அறிவியல் விஞ்ஞானி ஆகின்றார். போட்டியில் பலமுறை தோற்ற விளையாட்டு வீரர் சாதனையாளராக மிளிர்கின்றார். தொழிலில் பல நஷ்டங்களையும் கஷ்டங்களையும் சந்தித்த நபர் இலாபம் அடைகின்றார். உளியின் வலிகளையும் வேதனைகளையும் தாங்கிய கல் அழகிய சிலை ஆகிறது.

இயேசு என்ற நிலை வாழ்வு தரும் விதை சிலுவை சாவு என்ற தீர்ப்புக்கு உள்ளாகி மாசறு செம்மறியாம் கிறிஸ்து நம் பாவங்களுக்காய் மண்ணில் இறந்து மூன்றாம் நாள் வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். உயிர்ப்பின் செய்தி நம் மனங்களில் மலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் நிலைத்த சந்தோஷத்தையும் ஊற்றெடுக்கச் செய்கின்றது.

உயிர்ப்பின் செய்தி நமக்கு போராட்டங்களை எதிர்கொள்ளவும் துன்பங்களை சகித்துக் கொள்ளவும் இறை வேண்டலில் நிலைத்திருக்கவும் துன்புறுத்துவோரை மன்னிக்கவும் துரோகங்களை கடந்து பொறுமையோடு முன்னோக்கி பயணம் செல்லவும் இறுதியில் வெற்றி அடைவோம் என்ற ஊக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஒரு இளைஞன் வாழ்வில் வெற்றி அடைய பல இடங்களுக்கு அலைந்து திரிந்து இறுதியாக ஒரு ஞானியிடம் வந்து சேர்ந்தான். நான்

வெற்றியடைய எந்த பாதையில் பயணிக்க வேண்டும் என்று கேட்டான். அப்பொழுது ஞானி ஒன்றும் பேசாது ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி கையை காட்டினார். உடனே பேரார்வம் கொண்ட அந்த இளைஞன் அந்த இடத்தை நோக்கி ஓடினான். அங்கு சூழ்ந்துள்ள இருளின் பயங்கரத்தைக் கண்டு மிகவும் அஞ்சி ஞானியிடம் திரும்பி வந்து அதே கேள்வியை மீண்டும் கேட்டான் ஞானி எந்த பதிலும் கூறாது மீண்டும் அதே போல கையை நீட்டினார். இருளை கடந்து சிறிது தூரம் பயணிக்க ஆரம்பித்தான். அப்பொழுது மனதை திகிலுற செய்யும் சத்தமும், கொடிய விலங்குகளினுடைய எதிர்பாராத தாக்குதலாலும் நிலை குலைந்து ஆடைகள் கிழிக்கப்பட்டு இரத்த காயங்களோடு மீண்டும் ஞானியை தேடி வந்தான்.. இப்பொழுது ஞானியிடம் வெற்றிக்கான பாதையை காட்ட சொன்னால் என்னை உயிரோடு சாகடித்து விடுவீர்கள்போல.. வாயைத் திறந்து கொஞ்சம் பதில் சொல்லுங்கள் என்றான் சீற்றத்துடன்... அப்பொழுது ஞானி உலகில் வெற்றி பெற வேண்டுமென்றால் வாழ்க்கை என்னும் பயணத்தில் நாம் மேற்கொள்ளுகின்ற பலவிதமான போராட்டங்கள், தாக்குதல்கள் அனைத்தையும் கடந்து, அமைதியான மனதோடு இறைவனின் துணையோடு உலகை வென்ற வெற்றி வீரரான இயேசு கிறிஸ்துவின் வழியில் பயணம் செய்யும்போது நிலையான மகிழ்ச்சியும் நிம்மதியான வாழ்வும் நமக்கு கை கூடும் என்றார்.

ஆண்டவரின் தூதர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடி இருந்த கல்லை புரட்டி அதன் மேல் உட்கார்ந்தார். அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். நீங்கள் விரைந்து சென்று, இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் எனச் சீடருக்குக் கூறுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள். இப்பொழுதே நான் உங்களுக்குச் சொல்லி விட்டேன் என்றார். –(மத்தேயு 28: 2இ5–7)

உயிர்த்த ஆண்டவர் நம்முடைய எல்லா அச்சங்களையும், நடுக்கங்களையும் போக்கி மன உறுதியையும், நம்பிக்கையையும் தந்து தமது அளவற்ற இரக்கத்தினாலும் பேரன்பினாலும் ஒவ்வொரு நாளும் நம்மையும் நம் குடும்பங்களையும் காத்து வழிநடத்துவாராக.. ஆமென்.



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 89

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

## குறள் விளக்கம்

செல்வ நிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும். அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்

## சிந்தனை

அந்தக் காலத்தில் திண்ணைகள் இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லலாம். அந்தத் திண்ணைகள் மனிதநேயத்தின் அடையாளம். அது வீட்டில் வசிக்கின்றவர்களுக்கு மட்டும் உரியதல்ல வெயிலிலும் மழையிலும் யாத்திரை செல்லும் மக்கள் உட்கார்ந்து இளைப்பாறிச் செல்வதற்காகக் கட்டப்பட்டவை. வீட்டாரின் அனுமதியின்றி அந்தத் திண்ணைகளில் படுத்து உறங்கிச் செல்லலாம். திண்ணைகளில் படுத்திருக்கும் அந்நியரின் பசிதீர்த்த பின்புதான் வீட்டில் உள்ளவர்கள் புசிக்கின்ற நல்ல பழக்கமும் நம் மக்களிடையே இருந்தது.

ஆனால் செல்வம் இருந்தும் பிறரோடு பகிராமல் வாழ்வது என்பது மடமை. அத்தகைய செயலை மடையர்கள்தான் செய்வார்கள் என்று வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார். செல்வத்தினால் வாழ்பவர் என்ற நிலைமாறி செல்வத்திற்காக வாழ்கின்றவர்கள் அதிகரித்துள்ளனார். பயனற்ற செல்வத்தைக் கொண்டு புண்ணியத்தைச் சம்பாதிக்கும் கலையை அறியாதவர்கள் அவர்கள். தேவைக்கு அதிகமான பணத்தைக்கொண்டு பிறர் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நன்மனம் படைத்தவனே மனிதன்.

வேதாகமத்தில் லூக்கா 16ம் அதிகாரத்தில் ஏழை லாசருக்கு உதவாத செல்வந்தனை வள்ளுவரின் இக்குறளுக்கு ஒப்பிட்டுச் சொன்னால் மிகையாகது. வாழ்நாளில் தேவைக்கு அதிகமான செல்வம் அந்தப் பணக்காரனிடம் இருந்தபோதும் அவன் தேவையிலிருந்த லாசருக்கு உதவவில்லை. எனவே நித்தியப் பேரின்பத்தில் அவருக்கு பங்கு கிடைக்க வில்லை.